# உரிமமில்லாத சிறு வணிகர்களின்

## பொருட்கள், மின்னியல் ஸ்கூட்டர்கள் பறிமுதல்

**நமது நிருபர்**

கோலாலம்பூர், பிப்.13-
தலைநகரிலுள்ள சில இடங்களில் போக்குவரத்துக்கு இடையூறு செய்யும் உரிமமில்லாத சிறு வணிகர்கள் தொடர்பில் கோலாலம்பூர் மாநகர் மன்றம் நடவடிக்கை மேற்கொண்டது.

அமலாக்கத் துறை மற்றும் புக்கிட் பிந்தாங் கிளை அலுவலகமும் இணைந்து மேற்கொண்ட இச்சோதனை நடவடிக்கையில் ஜாலான் அம்பாங், ஜாலான் பி.ரம்லி, ஜாலான் பினாங்கு, ஜாலான் புக்கிட் பிந்தாங் ஆகிய சாலைகளில் கவனம் செலுத்தப்பட்டது.



இச்சிறப்புச் சோதனை நடவடிக்கையில் 1974 சாலை, வாய்க்கால் மற்றும் கட்டட சட்டத்தின் கீழ் 12 பறிமுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதில் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களில் மேசை, நாற்காலி, பிளாஸ்டிக், உடைகள், ஸ்கூட்டர், குடை மற்றும் பொதுமக்கள் பாதையில் இடையூறை ஏற்படுத்தும் இதர பொருட்களும் அடங்கும் என்று ஓர் அறிக்கையில் மாநகர் மன்றம் குறிப்பிட்டது.